இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

புதுப்பொலிவுடையதாய் பழைய பெருமை பெற்றது.

எட்டாவது வருஷம் (1889)

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டணம்: ஆண்டு 1-க்கு	ரூ.	5-60
வெளியூர், இந்தியா:	,, ரூ.	9-40
தொலையாப்பகுதி:	,, ரூ.	9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகாலம்	ரூ.	9-40
,, அரைக்காலம்	ரூ.	5-00
,, காற்காலம்	ரூ.	3-15
,, ஒரு அங்குலம்	சதம்	65

தொடர்ந்த முறைக்கு வேறு விகிதங்களிற் பார்க்க. விளம்பரங்கள் முற்பணமனுப்பினாலன்றி வெளியிடப்படா

புத்தகம்—௩௧. } யாழ்ப்பாணம்:—விபவஞு வைகாசிமீ ௨௨௳; (1928 ஜூன் 4) திங்கட்கிழமை. { இலக்கம்—௧௪.

உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த சிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனரேனு
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழுவாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லரமா காமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்களு மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதைக் காண விளம்பரத்தில் உலகனைமைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாதநிரமல வழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகர, பிதாரு, சாலாமூஸலி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சாரப்பருப்பு, பாதாமபருப்பு, சாத்தாவரி, ஸ்ரமுளளிவிதை, காகபபூ வகைகப ஸ்பம, அபாரகப்ஸ்பம, பவளபபஸ்பம், வெளளிபஸ்பம, அயகாந்த செந்தூரம சாம்பிராணிப் பதனகம இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கினறது.

இதனால் கிரிழிவு, கிர்க்கடுப்பு, கீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உணடாயிருக்கும பக்கவாய்வு, இருமல, காசம பித்தகாமாலை, பித்தபாண்டு, பினிசம, கைகால் காகதல் வலி, இடுப்புவலி, பக்கவாயவு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடனாகுக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும கோய்கள நீர்க்கு தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ஒரு தடல் ஔன்சுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இலலாததினால் முன்மனி ஆடர் அனுப்புதல் வேணடும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஜோரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
ஸீலோன்.

(M. 36.)

கௌரவ வேர் பொன்
இராமநாதனவர்கள்
இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணா 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பரிமேழகரும் இராமநாதியம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
(H 61) சுன்னாகம், யாழ்ப்பாணம்.

ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்லோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணா 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—

க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
(Q. 101.) யாழ்ப்பாணம்.

இலங்கை
ஆயுர்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

இக் கலூரியின் கருவூலத்த விதேலையின் யாலம் முடிவுடன் இவ்வருடம் ஆனிமாசம் முதலாகிறகு வழமைப்பிரகாரம் வைத்திய கலூரி ஆரம்பமாகும். அதிடன் ஆயுர்வேத சித்த வைத்தியத்தை மட்டும் கற்றுத் தேற விருப்புவோர்க்கு அதைத் தனிமையாகக் கற்பிக்கவும் பிரஷ்டர் வாசிக்கு விதிதரப்பினை (கொதன் போடைடன் சோஸ்) மூலமாயும் கற்பித்தத் தேர்ச்சிப் பத்திரம கொடுக்க எத்தனித்திருப்பதால விருப்புவோர் மேற்படி கல்லூரித் தலைருக்குத் தன்னாது மனுப்படிவங்களை அனுப்பி கேட்டுக்கொள்ளுகினறேன்.

இலங்கா ஆயுர்வேத வைத்திய கல்லூரித்
(M. 60.) தலைவர்.

காணிவிற்பனவு.

பச்சிலைப் பதுதியிலுள்ள சோரன்பற்று முறை; காதாய் என்று சொல்லப்படுவதும் 321 ஏக்கர், 2 ரூட, 15 பேடசு, வீராலங் கொண்டதுமான திறமான தென்னந்தோட்டம் விற்பனவுக்குக்கிடைத்து. முழுவதும் காய்க்கிற தென்னைமரங்கள் நிறைந்தன. வாங்குவோரின் வசதிக்காக, 150 ஏக்கர் 15 பேடசுக, 109 ஏக்கர் 10 பேடசும், 62 ஏக்கர் 1 ரூட 30 பேடசுமாக, ஒவ்வொன்றும் யாழ்ப்பாணம்—கண்டி றோடடை ஒட்டியபாக அடையதாக ஒன்றாகப் பிரிக்கப்படடிருக்கிறது. மற்ற விபரங்களுக்கு எமக்கு எழுதி அறிந்து கொள்ளவும்.

(25-5-28) V. A. துரையப்பா,
தெற்றுதெரு,
(Mis. 1223) யாழ்ப்பாணம்.

காணி விற்பனவு.

வாழைத் தோட்டம் எனப்படும் 100 ஏக்கர் கொண்ட நிலம். முழுவதும் தென்னந்தோட்டம் பழைப் புகைரதஸ்தானத்திலிருந்து 5மைல்தூரத்தி லுள்ளது. விபரமறிய விரும்புவோர் எமக்குத் தெரிவிக்கவும்.

V. வல்லிபுரம்,
கந்தர்மடம்.
(M. 64.) யாழ்ப்பாணம்

வெற்றிலை! வெற்றிலை!!
வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எக்தத் திலிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றுங் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மனியூடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினால் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எக்தக்காலமும் காங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினால் பின் வேறோரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களே யுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிழில் அப்புகாமி,
கம்பகா.

(S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிழிஸப்புகாமி,
கம்பகா.
Tel. Add:—"Magrisappuhamy",
(H. 62) Gampaha.

சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும்
தலைமைபெற்றுப் பிரகாசிக்கும்
ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணா 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தை யாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயமுண்டாகி வருவதுமன்றி செய்வினை போய் கல்வினை யுண்டாக்கும். எல்லாவிதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

தங்கப்பவுண்
அடையாள மிடப்பட்ட
கொளுக்கிஓடுகள்.

இலங்கையில் இதுவே நிறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உறுதியானது; கீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இத்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டைகாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
(Q. 100) தொண்டமானறு.

சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்க்கிறார்கள் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

லிட்டில்ஸ் ஒரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறீஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் கம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் தோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு
வைகாசிமீ உஉ திங்கட்கிழமை.

மழையில்லை.

ஊரிலே நடமாடுன்றி அநர்ம் அதிகரிப்பின் பஞ்சம் பிணி மழையின்மை பேதி முதலாம் நோய்கள், அவமிருத்து விபரீதம் முதலாம் அநர்த்தங்கள் நிகழுமென்பது பெரியோர் ஒ-ள்ளையாகும். மழை காலத்துக்குக்காலம் இங்கே குறைந்து வருகின்றதெனக் காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம் சென்ற வருடம் மழைகுறைவு எவரும் அநுபவத்திற் காணத்க்கதாக விருந்தது. மழையின்மையாலே வேளாண்மையும் இல்லாதொழிந்தது. சென்ற 6 மாசகாலமாக யாழ்ப்பாணத்திலும் தீவுபற்றிலும் நிலம் நனையாத தூறலேயன்றிப் பெருமழை ஒரு முறைவேனும் பெய்யாமையினால், மரங்கள் பயிர்கள் எல்லாம் வளங்குன்றின; ஆமாக்கள் உணவின்றி அலையலாயின; நீர் நிலைகளெல்லாம் வற்றிவிட்டன; பல வகையான நோய்கள் ஊரிற பரவலாயின, இப்போழுது தீவுப்பகுதியிலுள்ள சனங்கள் குடித்தற்குத்தானும் தண்ணீரின்றிக் கஷ்டப்படுகின்றார்கள், மேலும், மழைபில்லாமையினால் வினைக்கூடிய தீமைகள் நஷ்டங்கள் எவைகளோ அவைகளெல்லாம் இப்போழுது நிகழ்கின்றன; இன்னும் இரண்டு மூன்று மாசத்திற்கு இவ்வாறு மழையில்லாதொழியுமேல் இந்த யாழ்ப்பாணப்பகுதி என்னகதியடையுமோ யாமறியோம்.

ஏனைய ஊர்களிலெல்லாம் மழை பெய்து யாழ்ப்பாணத்தில் மாத்திரம் மழை பெய்யாமையினால் இக்குற்றம் ஊர்வாசிகளைப்பொறுத்ததன்றி மழையைப்பொறுத்ததல்ல.

"வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னவர் நெறியினக் கோர்மழை
காதன் மங்கையர்க்பின்றி கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே".

என்று உலகத்திலே சொல்லுவார்கள். பிராமணர்களாயுள்ளவர்கள் தங்களுக்குரிய அநுஷ்ட்டானங்களையும் அலட்சியஞ் செய்யத் தலைப்பட்டுவிட்டனர். தாம் செய்யும் பராந்த பூசை ஓமக்கிரியைகள் முதலியவற்றைச் சிலரினுஞ் சிலரோழிய ஏனையோர் வியாபாரமாக்கிக்கொண்டனர். அரசினருடைய விஷயத்தில் நாம் யாதுங்குறை கூறமுடியாது; பிரசைகட்குப் பெருந்தீமை தருவதென்று நீக்கப்பட்ட மதுக்கடைகள் பழையபடி வந்தமை பெருந்தீமையாகும்.

இனி, பெண்கள் விஷயமாகச் சொல்லுதில் ஒருசாரியாருடைய பெருமையைக் சாந்து வைப்பவர்களும், புராதன நாகரீகம் பழக்கவழக்கங்களைப் பேணுபவர்களும் இவ்வறத்தை இனிது நடத்துவோரும் சற் புத்திரர்ைப்பாப்போரும் ஆலயவழிபாடு விரதாதிரிர்ணயங்களைத் தங்கள் நாயகன் பிள்ளைகள் பொருட்டும் தம் பொருட்டும் வழவாது அநுசரித்துவருவாரும் தங்கள் ஒழுக்கத்தினால், தாம் பிறந்த குடி புகுந்த குடி வசிக்கும் ஊர் ஆகிய எல்லவற்றிற்கும் இதத்தைச் செய்வோரும் பெண்களேயவர் இவர்கள் தம்சாதிக்குரிய புராதன ஆசார சீர் திருத்தங்களையும் ஒழுக்கத்தையும் கைவிடத் தலைப்படுவேரேல், அந்நியருக்குரிய நாகரீகம் ஒழுக்கவழக்கங்களைக் கைக்கொள்வேரேல் இவரால் சோவன மழையின்மை பஞ்சம் பிணி முதலியன வரும்.

"மழையில்லையே" என்று வாளா சொல்லிக்கொண்டு இருப்பதனால் மாத்திரம் மழை பெய்யுமெனக் காத்திருக்க வேண்டுமா மழை மனுஷனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. தெய்வத்தாலாவது; மழையின்மை, மனுஷன் தவறி நடக்கும் போது அவனைத் தண்டித்தறிந்து திருத்துவதற்குக் கடவுள் செய்யும் ஒரு காருண்ணியத் தொடு கூடிய தண்டனையாகும். இப்பொழுது மழையேன்றுமாறாமல் நாம் எம்மை யென்றவரையிலே திருத்திக்கொள்ளுதல் வேண்டும்; ஆலயவழிபாடு விரதானுஷ்டானம் புண்ணியமான செயல்கள் இவைகளை அநுசரித்தல் வேண்டும் மழை குறைவு காலத்திலே நமது முன்னோர் தங்கள் குலதெய்வங்கட்கு மகா அபிஷேகங்களையும் விசேஷ பூசை திருவிழாக்களையும் மழையை வேண்டிச் செய்து வந்தார்கள். இப்பொழுதும் ஊரவர்கள் எல்லோரும் ஏகாபிநிதப்பக்தியோடு தங்கள் கிராம தெய்வங்கட்கு மகா அபிஷேகம் பூசை செய்து மழை வேண்டி வருவரேல் தெய்வத்தால் அது கூடும்.

சிவஞான போதம்.

(முதற்பாகம்.)

வண்ணை, ஸ்ரீ வை. இராமாநாதன் அவர்களால் அனுவதித்துப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

[39-ம் பத்தகம், 81-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம். உ.

அவன், அவள், அது வெனும் அவை
மூவினைமையின்
தோற்றிய நிதியே ஓடுங்கி மலத்துள
தாம், அத்தம ஆதி என்மனார் புலவர்.

எட்டாம் பாடம்-இவ்வுலகம் மாறி மாறி முத்தொழிற் படும்.

இவ்வுலகம் தோற்றம் நிலை ஒடுக்கமாகிய மூனறு தொழில்களைப் பொருந்தி நிற்குமெனறோம். (சூ1—பா 5) இம் மூனறு தொழிலகளையும் ஒரே முறை தான் பொருந்தி நிற்குமா? அனறி மாறி மாறிப் பொருந்தி நிற்குமா? என்பதை ஆராய்வாம் இவ்வுலகம் என்றும் உள்ளபொருளானறோம். இதன் தோற்றம் நிலை ஒடுக்கங்கள் வடிவமாறுதலே யென்றோம். (சூ-1 பா-6) இவ் வடிவம் மாறுதல் கர்த்தாவலனறித் தானே கடைபெறுமேல் அதற்கு யாதும் பயன வேண்டப்படுவதில்லை இவ் வடிவ மாறுதல் சேதனனாகிய கர்த்தாவாலே யுளதாக அது யாதானும் பயன் கருதியே அக்கர்த்தாவால் செய்யப்படல் வேண்டும். இவ்வுலகினைத் தோற்று முன்னர் அது ஒடுங்கியன்றோ கிடந்தது. ஓர் பயன்கருதியன்றோ அவ்வாறு ஒடுங்கிக் கிடந்த உலகம் தோற்றப்படுவதாயிற்று. அதுபோல் இனி ஒடுக்கப்படும் இவ்வுலகமும் மீளவும் அப்பயன் வேண்டப்படும் வரை தோற்றப்பட வேண்டுமன்றோ. எனவே இம்முத்தொழிலாற் கருதப்படும் பயன் வேண்டப்படும் வரையும் ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே நில்லாது மீளவும் மாறி மாறித் தோனறி நின்றொடுங்கிக்கொண்டு நிற்குமென முடியும். இக்கருத்தினை யுணர்த்தியவே, இச் சூத்திரம் உலகினை உளதாய் ஒடுங்குமெனறோதாது ஒடுக்கத்தின் பினனரும் உளதாம் என்னும் பொருளையும் அடக்கி "ஒடுங்கி மலத்துளதாம்" என்றோதியது.

ஒன்பதாம் பாடம்— இவ்வுலகிற்குக் கர்த்தா அதன் சங்காரகாரணனே.

இவ்வுலகம் மாறி மாறி முத்தொழிற் படுமெனறோம். (சூ 1—பா.8.) அவ்வாறு தொழிற்படுத்துவது ஒரு சேதனகார்த்தாவென்றும் சொனனோம். (சூ-1-பா-7.) இவ்வுலகில் சேதனப் பொருள்களும் அசேதனப் பொருள்களும் உளவெனறும் சொனனோம். (சூ 1-பா-2.) என்றால், இச்சேதனப் பொருள்களில் யாதாயினும் ஒனறு இவ்வுலகின் கர்த்தாவாதல் கூடுமோ எனபதை ஆராய்வோம். இவ்வுலகம் ஒருகாலத்து ஒருசேர ஒடுங்குமெனறோம். (சூ-1பா-5.) இவ்வொடுக்கமே சர்வசங்காரம் எனப்படும். இச்சர்வ சங்கார காலத்திலே இச்சடவுலகப் பொருள்கள் யாவும் ஒடுங்குமெனபது முன்னரே விளக்கப்பட்டது. இக்காலத்து சித்துலகப் பொருளாகிய சேதனர்களை எவ்வாறுவாரென்பதை முதற்கண் ஆராய்வாம். இவ்வுலகிற் காணப்படும் சேதனப் பொருள்கள் யாவும் அசேதனப் பொருள்களோடு சேர்ந்தே காணப்படும் என்றோம். (சூ-1-பா-2.) என்றால் இவ்வுலகிலுள்ள அசேதனப் பொருளகள் யாவும் ஒடுங்கிய காலத்து அவற்றோடு கூடியினறு சேதனப் பொருள்கள் யாவும் காணப்படாமல் மறையுமெனபதாய முடியும். அதாவது இச்சேதனப் பொருள்களும் ஒடுங்குமென்பதாய் முடியும். இவற்றுள் ஒடுக்கமாவது என்பது பின்னர் விளக்கப்படும். (சூ-1-பா-12.) இவ்வொடுக்கம் எவ்வாறாயினும் சர்வசங்கார காலத்திலே சேதனப் பொருள்களும் விளக்கமினறி மறைவதால் ஒடுங்கிய இச்சடவுலகம் அவைகளால் தொழிற்படுமொறியில்லை. இச்சர்வசங்காரகாலத்தும், தான் ஒடுங்காது இச்சடவுலகத்தை ஒடுக்கியவனே மீள அதனைத் தோற்றுவித்தற்குரியன்; இவனே சங்கார காரணன் என படுவன். இவனே தனு கரண புவன போகங்களாகிய எல்லா அசேதனப் பொருள்களையும் தோற்றுவித்துச் சேதனப் பொருள்களோடு கூட்டுவித்து, அச்சேதனப் பொருளகளை விளக்கமுறும்படி செய்பவன். தோற்றுதற் கருத்தாவையும் ஒடுக்கத்தினாலும் மாற்றித் தோற்றத் தொழிலில் நிறுத்துபவன் இவனே. நிதி கர்த்தாவையும் ஒடுக்கத்தினாலும் மாற்றித் திதித்தொழிலில் நிறுத்துபவனும் இவனே எனவே உலகின் தோற்றம் நிலை ஒடுக்கங்களாகிய மூனறு தொழில்களையும் செய்யும் கர்த்தா இவனே என முடியும். இதுவன்றி இவனுக்குத் தோற்றக் கேடுகள் இல்லை எனபதும், இவன் அசுரநிப்பொருள் எனபதும் பெறப்படும் இக்கருத்தினையே இச்சூத்திரம் 'ஒடுங்கி மலத்துளதாம்' என உணர்த்தும் இவ்வாக்கியத்தின பொருள் ஒடுங்கி யாகிய சங்காரகாரணனினினறும் உளதாம் என்பது.

சேற்றினின்றுண்டாகாது அதனை ஆதாரமாகக்கொண்ட நிறங்களினறுண்டாகிய தாமரை பங்கஜம் எனப்படுவது போலச் சங்காரகாரணனினினறும் உண்டாகாது அவனை ஆதாரமாகக்கொண்ட மற்றொன்றினின்று உண்டாகிய உலகமும் சங்காரகாரணனினின்று உண்டாவதாயச் சுருதிகள் கூறும். என்றால் சங்காரகாரணன் இவ்வுலகின் காரணன் அல்லனோவெனின், கூறுதும்: காரணம் மூன்றுவகைப்படும். அவைமுதல், துணை, நிமித்தம் என்பன. குடதநிற்கு மண் முதற்காரணம், தண்டு சக்கரங்கள் துணைக்காரணம், குயவன நிமித்தகாரணம். இவ்வுலகிற்கும் இவ்வாறே முதல், துணை, நிமித்தம் என்னும் காரணங்கள் உள்ளன. அவற்றுள் சங்காரகாரணன் இவ்வுலகின் நிமித்தகாரணனாவன இதன முதற்காரணம் அடுத்த பாடத்திலும், துணைக்காரணங்கள் அடுத்த சூத்திரத்திலும் விளக்கப்படும்.

பத்தாம் பாடம் இவ்வுலகின் முதற்காரணம மாயை.

சங்காரகாரணன் இவ்வுலகின் நிமித்தகாரணன் என்றும் அதன முதற்காரணம் வேறொனறு என்றுஞ் சொனனோம். (சூ-1-பா-7.) அம்முதற்காரணக்தான் யாது என்பதை ஆராய்வாம். உலகம் எக்காலத்தும் உள்ள பொருள் என்றோம் (சூ-1-பா-6) தோன்றிய காலத்தும் ஒடுங்கிய காலத்தும் உள்ள பொருள் என்றோம். தோனறியகாலத்து சமமாற்காணப்படும் இவ்வுலகமாய் விரிந்துள்ளதை அறிவோம். ஒடுங்கியகாலத்து எவ்வாறுளளது என்பதே நாம் ஆராய வேண்டுவது. உலகம் ஒடுங்கியபோது அதன காரணவடிவமாக மாறும் என்றோம். (சூ-1-பா7) இக்காரணப்பொருளே "மாயை" எனப்படும். இச்சொல்லிலுள்ள 'மா' தோற்றத்தையும், 'யா' ஒடுக்கத்தையும் உணர்த்தும். அதாவது இச்சொல்லின் பொருள் ஒடுங்கித் தோற்றுவதற்கு இடனாய் நிற்பது எனபதேயாம். இமமாயை வியாபகமாயுள்ள ஒரு சூக்குமசடப்பொருள். இது வியாபகமாய இருத்தலினாலே இதற்குத் தோற்றக் கேடுகள் இல்லை இது அநாதிப்பொருள்களில் ஒனறு. இதினினறு உண்டாகிய உலகமே தோற்றக் கேடுகளை உடையது. இது அத்தோற்றக் கேடுகளிடனாய் மாத்திரம் நிற்பது. உலகப் பொருள்கள் யாவும் ஒடுங்குமபோது இதனுள்ளேயே அவ்வவற்றின சூக்குமரூபமாய் மாறி ஒடுங்கும். மீளத் தோனறும் போது இதினின்றே மேற்கூறிய சூக்குமப்பொருள்கள் யாவும் தூலமாய் வெளிவரும். யாது யாண்டு ஒடுங்குமோ, அது அதனின்றே தோனறும். இவ்வண்மை ஒரு தூலப்பொருட்கும் அதன சூக்குமகாரணப் பொருட்குமே யனறி ஒரு தூலப்பொருட்கும் அதன் தூலகாரணப் பொருட்குமனறு. வித்தினின்றுண்டாகிய மரம அல்வித்தில் ஒடுங்குவதில்லை. வித்து மரம இவ்விரண்டும் தூலமாதலால் இவ்வண்மை அவற்றிற்குப் பொருந்தாது. ஆனால் மரம அதன சூக்குமகாரணத்தில் ஒடுங்குவதிற் றடையில்லை. அபபடியே இவ்வுலகமும் அதன் சூக்குமகாரணமகிய மாயையில் ஒடுங்குவதில் தடையில்லை. ஆனால் சங்காரகாரணனும் சூக்குமப்பொருள் ஆதலால் அவனுள்ளே உலகம் ஒடுங்காதோ எனின ஒடுங்காது. இச்சங்கார காரணன் சித்துப்பொருள். உலகப்பொருள்கள் யாவும் சடம். சடம் சடத்தில் ஒடுங்குமென்பதும் மீள அச்சடத்தினின்று தோனறுமென்பதுமே பொருத்தம். இதுவன்றிச் சடப்பொருள் சித்தினின்று வருதலும் அதனுள் ஒடுங்குதலும் பொருத்தமனறு. இயற்கையிரேதம் (இயற்கை—சற்காரியவாதம் law of nature) ஆதலால் சங்காரகாரணன் இவ்வுலகிற்கு முதற்காரணனுமாதில்லை. நிமித்தகாரணன் மாத்திரமே. மாயையே இவ்வுலகின் முதற்காரணம்.

ஆனால் கடவுள்பரம் இவ்வுலகம் தோனறியதாகச் சுருதிகள் சொல்லுவதென்னையெனின் கூறுவாம். இவ்வுலகம் சங்காரகாரணனை ஆதாரமாகக்கொண்ட வேறு காரணத்தினின்று உண்டாகும் என்றோம். (சூ-1-பா-9.) அவ்வேறு காரணம் மாயை என்னுஞ் சொனனோம். எனின், மாயை சங்கார காரணனாகிய கடவுளை ஆதாரமாகவுடையது எனபது பெறப்படும். வித்தினினறும் தோனறிய முளையை அவ்வித்துக்கு ஆதாரமாக வுளள மண்ணினினறும் தோனறியதாய்ச் சொல்லுவது போல, மாயையினினறுந் தோனறிய உலகத்தை அதற்கு ஆதாரமாகிய கடவுள்பரம் தோனறிய தாகச் சுருதிகள் கூறும் எனின, கடவுளின ஆதாரமின்றி உலகம் தோன்றுதோ வெனின, தோனறாது. மணணின ஆதாரமில்லாவழி வித்தினினறும் முளை தோனறாததுபோல, கடவுளின் ஆதாரமில்லாமையினினறும் உலகம் தோனறுவதுமிலலை இவ்வுண்மைகள் யாவும் உணர்த்தவே 'மலத்து ஒடுங்கி உளதாம்' என இச்சூத்திரம் இயைபுற ஓதும். மலம் என்னும் இச்சொல் ஆணவம், கனமம், மாயை, என்னும் மூவகை மலங்களையும் உணர்த்தும் பொதுச் சொல். கனமமலம் வரும் சூத்திரத்தில் விளக்கப்படுதலால், இச்சூத்திரத்தில் இச்சொல் ஏனைய இரண்டு மலங்களையும் உணர்த்தும் அவற்றுள் இப்பாடத்து உணர்த்தப்பட்டது மாயாமலம்.

நவினுதீவுக்குப் பொலிஸ்காவல்.

நவினுதீவுக் கடலில் சங்கு குளிக்குங் காலங்களில் அதிதீவுவாசிகளான ஏழைச்சனங்களுக்குக் குளிகாரச் சோனகரால் பல கஷ்டங்கள் நேரிடுவது வழக்கம். சோனகர் சனங்களுக்கு யாதொரு இடக்கனுஞ் செய்யாவண்ணம் பாதுகாத்தற்கு இம்முறை அரசினர் அத்தீவிலே ஓர் கூட்டம் பொலிசரை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றனர். நிகழுங் கலகங்களை வினங்கித் தீர்ப்பதற்கு ஒரு உத்தியோகத்தரும் அவர்க்குத் துணையாகிய ஓர் கொங்கும் அனுப்பப்படுவார்கள. ஆனி முதல் ஆவணி வீருகக் குளிப்பு நடைபெறும்.

கதாப் பிரசங்கம்.

இனுவில் இந்து வாலிப சங்க ஆதரவின் கீழ் நிகழும் பிரபவ வருடம் வைகாசி 14உ ஞாயிற்றுக் கிழமை யன்று (27.5.28) மாலை 7மணி யளவில் நிருக்குற்றுறை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திருவாளர் ப. சிங்காரவேற்பிள்ளை யவர்கள் இனுவில் சிவகாமி அம்பாள் கோயில் மண்டபத்தில் "திருநீலகண்டநாயனார்" என்னும் நவிவிய சரிதநிரதத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த பிரசங்கம்செய்தனர். அத்தருணம அனவிறந்த சைவாபிமானிகள் அங்கு வந்து சுவாமிதரிசனஞ் செய்து பிரசங்கத்தையுங் கேட்டு இன்புற்றிருந்தனர். கடித.

பொலீசர் சிறைத் தண்டனை பெற்றமை.

மருர், சேரம், அப்புகாமி யென்னும் மூன்று பொலிஸ்காரர், கேதைனமுல்லையிலுள்ள சென வரத்தின் என்பவரை அவர் கோயிலுக்குப் போய்த திரும்பி வரும்பொழுது அடித்தார்களென அவர்களமீது கொழும்புப் பொலிஸ்கோட்டில் ஓர் வழக்குத் தொடரப்பட்டது. சீறிபதி எதிரிகள் குற்றவாளிகளெனக்கூறி அவர்களை ஒவ்வொருவருக்குந் தனித்தனி, ரூபா 20 அபராதமும் தீராது முடியும்வரை சிறையும் விதித்தனர். இது காரணமாக அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தை இழக்கவேண்டுமெனவும் நீதிபதி தீர்வை வற்குறிப்பிட்டுள்ளார்.

குடியேற்ற நாடுகளின் இரண்டாம் மந்திரி.

குடியேற்ற நாடுகளின் இரண்டாம் மந்திரியான கௌரவ W. ஒல்ஸ்பி-கோர் அவர்கள் இந்தமீ 5உ காரல இலங்கைக்கு வந்து இலங்கையில் 15 நாட்கள் தங்குவார். இவருக்கு இல்கே பல விருந்துகள் அளிக்கப்படும். இவர் அரசாங்கத்தபனங்களையும், கொழும்பிலுள்ள வித்தியாசாலைகளையும், நற்பார்வையிடவும், தேயிலைச் செய்கை, கமத்தொழுற செய்கைகளையும் பார்வையிடுவர். அழிந்த புராதன பட்டினங்களையும், நற்பர் தேயிலை தென்னை முதலாந் தோட்டங்களையும், சீர்ப்பாய்ச்சற் பகுதியையும் இவர் தரிசிப்பார். இவர் இலங்கையினின்றுந் திரும்பும்பொழுது சட்டநிருபணசபை அங்கத்தவர்களால் இந்தமீ 20உ இவருக்கு ஓர் விருந்து அளிக்கப்படும்.

குளத்திற் குழந்தை அமிழ்ந்தியமை.

கல்கப்பு பகுதியிலுள்ள விதானை ஆராச்சியினுடைய இரண்டு வயதுள் குழந்தை யொன்று தாமரைப் புஷ்பங்கள் நிறைந்த குளமொன்றில் வீழ்ந்து இறந்தது. சென்ற 25உ வெள்ளிக்கிழமை சாயங்காலம் அந்தக் குழந்தையும் இன்னும் இரு பிள்ளைகளும் குளத்திற்குச் சமீபத்தில் நின்ற மாமரத்தின்கீழ் கொஞ்ச நேரம் விளையாடிக்கொண்டிருந்துவிட்டு அவிடத்தை விட்டகன்று குழந்தை குளக்கரையிலும் பின்னர் இருகரும் குளத்திற்குச் சமீபத்திலுமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்படி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, அக்குழந்தை தாமரைப்புஷ்பங்களில் ஆசைகொண்டு குளத்தில் இறங்கியது. தண்ணீருக்குள்கீழ்த்து அந்தக் குழந்தை அமிழ்ந்துவதைக் கண்ட இன்னொருபையன் அதை வெளியே விட்டுவிட்டான். அப்பொழுது அக்குழந்தைக்குப் பிரஞ்ஞையில்லை.

புகைரதவிபத்து.

அம்பலாங்கொடையிலுள்ள ரன்டொம்பே என்னுமிடத்தில் தெருவீதியார் புகைரதப் பாதை குறுக்கறுத்துச் செல்கின்றது. அந்த இடத்தில் சென்றாண் 29-உ காலை புகைரதவிபத்தொன்று நிகழ்ந்தது. காரொன்றாவிலிருந்து விறகேற்றிக்கொண்டு அம்பலாங்கொடைக்குச் சென்றுகொண்டிருந்த மாட்டுவண்டியொன்றைப் புகைரதம் எற்றிவிட்டது. அதினால் வண்டி மாடுகளுக்குக் காயமும் பெருஞ் சேதமு மேற்பட்டன. 13 வயதுச் சிறுவனான வண்டிக்காரன் புகைரதப்பாதையிலுள்ள கதவுன் றிறக்கப்பட்டிருந்தபடியால் அபாயம் வாராதென எண்ணி வண்டியைச் செலுத்திக்கொண்டு போனான். வண்டி பாதையைக் கடக்குஞ் சமயத்தில் புகைரதத்தின் முனையால் எற்றப்பட்டது. உடனே புகைரதம் நிற்பாட்டப்பட்டது. புகைரதக்காவலனும் புகைரதச் சாரதியும் இறங்கிப் பார்த்தபொழுது காவற்காரன் தனது அறையில் உறங்கிக்கொண்டிருப்பதைக்கண்டார்கள். வண்டிக்காரனுக்கு யாதொரு அபாயமுமில்லை.

புதுக்கோட்டை மகாராஜா.

இவர் இந்தமையைப்பற்றி முன்னர்க் கூறினோம். இவருடைய பிரேதம் இப்பொழுது இந்துமதாசாரப்படி சென்னாரா கடலையில் இங்கிலாந்தில் தகனஞ்செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. சென்றவிராமுக்கியமை சாயந்தரம் பிரேதத்தைக் கரையிடுக்கப்பற்றி இங்கிலாந்திற்குக் கொண்டு போயிருப்பார்கள் பாரிஸ் நகரத்தில் வசித்தான சடகோபாசாரியரும் கடைபெற்றிராத ஜோர்ஜ்மன்னர் புதுக்கோட்டை ராணியாரு அதுதாபசெய்தி ஒன்று அனுப்பியிருக்கின்றனர்.

இப்புதுக்கோட்டை மன்னராகிய இராஜமார்தாண்ட பைரவதொண்டைமான் 1875-ம் ஆண்டு பிறந்தவர். அன்றிரேலியா தேசத்து மெல்போன் என்னுமிடத்திலுள்ள மிஸ்டர் W மில் M A, L L D அவர்களின் கனிஷ்ட புத்திரியாகிய எஸ்தேர் மேரி சொறற் என்னும் பெண்ணில் காதல்கொண்டு 1915-ம் ஆண்டு அவரை விவாகஞ்செய்துள்ளார். அவர்களிலாவப் பிறந்த சிட்னிமார்த்தாண்ட என்னும் புதல்வர் இப்பொழுது பன்னிரண்டு வயதுடையவராயிருக்கின்றார் இவர் 1916-ம் ஆண்டு பிறந்தவர் இவ்வரசர் தம் முன்னோர் வழியை யொத்து ஓர் அன்றிரேலியா மாதைத் தமது ராணியாக கொண்டிருந்த போதிலும் அவர் தம் சமந்தாளத்தில் இருந்து தமது மனைவியையும் மகனையும் இந்துமதாசாரப்படி வாழச் செய்கிறார்கள் இப்பொழுது ஒருவேளை அவர் மரணுக்குப் பட்டம் கிடைத்தல் கூடும் அவர் மகன் இந்துமதத்தா பிராதபடியால் பிரஜைகளில் ஒரு கட்சியார் அப்புதல்வர் அரசபதவியடைவதை மறுத்து நிற்கின்றனர் இப்பொழுது யார் அரசபதவியை யடையவேண்டியது என்னும் விஷயம் அரசாங்கத்தாரின் ஆலோசனையில் இருக்கின்றது. இப்பொழுது இராஜப்பிரதிநிதியாகவிருக்கும் மகாராஜாவின் சகோதரனுக்கே அரசபதவி கொடுக்கப்பட வேண்டுமெனச் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இலங்கை சேவிங்ஸ் வங்கி.

வங்கியில் பணம் வைத்திருப்பவர்களின் வருஷாந்தக்கூட்டம் மற்றமாதம் 18உ 4-30 மணிக்குச் சட்டந்நபனசபையின் சாலையில் கூடப்படும்.

கே. டப்ளியு. வை. அதுகோரல்,
சங்கிட்டுநர்.

இலங்கை சேவிங்ஸ் வங்கி,
கொழும்பு 1928 ஆம் மேமாதம் 23உ.
(G. 909)

உபாத்திமார் தேவை.

திருக்கோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்துக்குத் தாராதலப் பத்திரம் பெற்ற இரு உபாத்தியாயர்கள் தேவை. இருவரும் பெண்களாயிருப்பின் நல்லது. அன்றேல் குடும்பமாக இரு உபாத்தியாயர்கள் வரினும் ஏற்றுக் கொள்ளப்படும். மற்றும் விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதி அறிந்துகொள்ளுக.

திருக்கோணமலை,
19—5—28.
(Mis 1218)

பொறுக்கியெடுத்தவை.

By V. K. S.

மோட்டர் ரதத்திற்குத் தப்பக்கூடியவழி யென்காலது இருக்கிறதோ என்ற ஒருகாவினவி, தானியதற்குப் பதிலுமிறக்கின்றார்.

* * *

நீ முன்னுக்குப்போனால் அது பின்னுக்கு வந்து இடிக்கும். பின்னுக்கு வாங்கினால் முன்னுக்கு வந்து தள்ளி விழுத்தும். தெருவின் பக்கங்களுக்குப் போனால் காறுக்குள்ளே அதுன்னைத் தூக்கியெறிந்து கொல்லும்.

* * *

ஒருவேளை நீ என்னுடைய வீட்டுக்குட் புகுந்திருந்துகொண்டு அறையைப் பூட்டுவாயோ? அப்படியானால் அந்த மோட்டாரதம் சாரதியையும் இழுத்துக்கொண்டு உன் வீட்டுக்கதவையுடைத்து அறைக்குள் வந்து, கட்டிலோடு உன்னைப்புரட்டி விழுத்தி நசுக்கிக் கொல்லும். நீ தப்பமாட்டாய்.

* * *

ஆகையால் நீ யெப்படித்தெருவீதிப்பிரயாணஞ் செய்வாய்? நடந்துபோவது பேசக்கூடாத காரியம். மாட்டுவண்டியிற் பிரயாணஞ் செய்யலாமென்றால் மாட்டு வண்டிகளெல்லாம் நாதசாலக்கறுப்பப்பட்டன. தெருவெல்லாம் மோட்டாரதமயமாகவும் புழுதியமயமாகவும் இருக்கின்றன. நீ ஷோவிற் பிரயாணஞ் செல்லாமென்றால் .....

* * *

"நான் சென்ற சுக்கிரவாரம் ஒரு றிக்ஷோவிற் பிரயாணஞ்செய்தேன். அப்பா அப்போது நான் பட்டது போதும். ஏனென்றால், றிக்ஷோவெறிக் கொஞ்சநேரத்தன் காறுக்குள்ளால் எழும்பி வெளியில் வந்து, நிதியை மூலையை ஒரு வழிப்படுத்தி, சட்டங்களும் முரித்த சக்கரங்களும், லைக்கம்புகளும், கிழித்த வானிஸ் லிலைகளும் குவிந்திருந்த விடத்திற்கு முன்பாக நின்றேன்.

* * *

"நீ யென்னுடைய 'கார்' வந்ததையேன் கவனித்து விலத்திக்கொள்ளவில்லை? என்று துரைமகனொருவர் சற்றுவிரோபத்தோடு கேட்டார். அவருடைய 'கார்' பக்கத்தில் நின்றது. அதில் ஒரு துரைச்சானி வீற்றிருந்தார்.

* * *

"துரையே, நான் செய்த குற்றத்தைத்தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். அறியாமலுமகவன்னானத்தினுலுஞ் செய்த பிழை. தாங்களும் தங்களது மோட்டாரதமும் போகக்கூடிய தெருவில் எழையாகிய நான் றிக்ஷோவிற் பிரயாணஞ் செய்தது மகாபாதகந்தான். அன்றியும் முன்னுக்குப்போன நான் பின்னுக்குப் பாராமறபோனது பாதகமானா குற்றம். தாங்களோ பெரியவர். 'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே!'

* * *

இவ்விதமாய் நான் கூறியவுடனே துரையவர்களுக்குச் கோபம் ஆவிடிட்டது. "சரி இது உனதுடைய றிக்ஷோதாரினு" என்று கேட்டார். 'துரையவர்கள் என்னைப் பரிகாசஞ் செய்கிறீர்கள் போலிருக்கிறது, காரிய மிலை. இது எனது றிக்ஷோவல்ல. அப்படியிருந்தாலும் இப்பொழுது இதை அப்படிச் சொல்லமாட்டேன். இது ஒருகாலம் றிக்ஷோவாயிருந்ததுதான். அப்படியிருந்தபொழுது அந்த றிக்ஷோ இதோ நிற்கிற சுப்பனுக்குச் சொந்தமாயிருந்தது"

* * *

"ஆகையால் தங்களுக்குப் பிரியமாயிருந்தால் இவனுக்கு இந்தத் தண்டு, துணி, தடிகளை ஒரு தச்சனிடம் கொடுத்து சரிப்படுத்துவதற்காக ஏதாவது சித்தமிரவினுல், இக்கிழ்மகன் தங்களுக்கென்றும் நன்றியுளனவனுயிருப்பான். அவனுக்குன்ன காயங்களிடம்பற்றித் தாங்கள் யோசிக்கத் தேவையில்லை. அவைகள் தாமாகவே மாறவேண்டியவைதான். இயற்கை வைத்தியமே இவனுக்கு நல்லது" என்றேன்.

* * *

அதற்கவர், "காகவிஷயத்தைப்பற்றிப் பின்னுக்கு யோசிக்கலாம். உனக்கு எனது மோட்டாரதத்தினுல் ஏதாவது வசதியீனம் உண்டா?" என்று கூறி, புன்னகையோடு கேட்டார். நான் உடனே, "ஐயா, அப்படித் தாங்கள் யோசிக்கக்கூடாது. மோட்டக்கார் எனக்கு வசதியீன முண்டெண்ணியிருந்தால், இப்பொழுது முற்றும் வேறுனவோரிடத்தில் நின்று, இப்பூமியிலே நான் செய்த தீவினைகட்கெல்லாம் மறுமொழி கொடுத்துக்கொண்டிருப்பேனல்லமல், தங்கள் சந்நிதியில் நின்று தாங்கள் கேட்குங் கேள்விகட்கு விடையிறுத்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றேன்.

* * *

"ஆனுல் தாங்கள் எனக்குச் செய்யவேண்டிய வுதவியொன்றுண்டு. றிக்ஷோவாயிருந்தவோர் பொருளையும், அவதத் தெருவாலிழுத்துக் கொண்டுபோன இந்தமூர்த்தனையும் காறுக்குள் தூக்கியெறிந்து, என்னையும் (விளையாட்டுக்காய்) மற்றக்காறுக்குள் ஒதுங்கவைத்த, இந்த நாசச் சுவை செறிந்த (Humorous Cur என்று இங்கிலிஷில் இருக்கிறது) தங்கள் 'காறி'ன் பெயரை (Mar) யறியலாமோ" வென்று தாழ்மையாய்ச் சொன்னேன்.

* * *

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது 'காறி'லேயிருந்த ஒரு சீமாட்டி எங்களுக்குக்கிட்டா ரதத்தைச் செலுத்திக்கொண்டு வந்து விட்டார். எனது 'காறி'ன் பெயரை யறிவதால் உனக்கு விளையும் பலன் என்ன? என்றார். "இந்தக்கார் என்னுல் சாமானியமான தல்ல. ஐரோப்பிய தேசம் முழுவதும்....."

* * *

"துரையே, கொஞ்சம் பொறுங்கள் தயவு செய்து அவ்வளவு நிறமான ரதமானுல் அதின் பெயரை எனக்றியிக்கவேண்டாம். ஏனெனில், ஒருகால் அதன் பெயரை யறிந்துவிட்டால் அப்படிப்பட்ட நல்ல 'காறொன்று வாங்க ஒரு ஆசைவரினும் வரும். நான் இதென்ன 'மோட்' (Ford) 'காறோ' வென்று அறிதற்காகவே கேட்டேன்" என்றுரைத்தேன்.

* * *

சொன்னவுடனே, ஏன் சொன்னேன் என்று தூக்கங்கொண்டேன். ஏனென்றால் 'மோட்' (Ford) 'காறென்ற சத்தங்கேட்டதே பாம்பைக்கண்ட நரியைப்போல் நிலைகொண்டு தனது அரிய விமானத்தில் ஏறி விட்டார். ஆனுல் அதில் இருந்த சீமாட்டி அடங்காக் கோபங்கொண்டு,

* * *

"உனக்கென்ன கண்ணில்லையா? எங்களைப் பார்த்தால் "மோட்,, காறில் நிரிபவர்களைப் போல உனக்குத் தெரிகிறதா? உனக்குப் பேசுவதின்னது பேசாத தின்னதென்று தெரியாதா?" என்று கடுங் கோபத்துடன் முச்சுவிடாமல் கொஞ்சநேரம் பேசினார்.

* * *

"சீமாட்டி, துரைச்சானி ஸ்ரீரத்தம் உங்களை மன்னிப்புக்கேட்கிறேன். தயவுசெய்து கோபத்தைக் குறையுங்கள். 'உங்களுக்கு நான் ஒரு மோட்டர் ரதம் தெரிந்து வரக்வேண்டிய சாத்தப்ப மேற்படுமானுல், அவ்விரதம் உலகத்திலுள்ளவை யெல்லாவிலும் சிறந்ததாயிருக்கும். அதைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. ஆனுல் நான் என்ன காரணத்தை கேட்டகாரணம் வேறு. அது என்னவென்றால், சற்று முன்பு உங்கள் காறொன்றைத் தட்டி விழுத்திய பொழுது கொஞ்சங்கூடத் தட்டியிருக்குமாயிருந்தால் இதற்குள்ளாய் நான் இறந்திருப்பேன். நானிறப்பது ஏதோ பெரிய பிரதாபமான விஷயமென்று சொல்ல வரவில்லை. ஆனுல் நான் ஒரு கோட் (Ford) காறினுலே இடறிச் செத்தேனென்ற வசை என் சந்ததியாருக்கு வந்திடுமோவென்ற சந்தேகங்கொண்டே அவ்விதங் கேட்டேன்", என்றேன்.

* * *

இன்னுஞ் சொன்னேன் "வோட் காறினுல் பிறப்பட்டு என்று உயிர் நீங்கியிருந்தால், எனது சொந்திய பந்தங்களும் எனதுசித்தவீட்டுக்குவரமாட்டார்கள். எனது அரிய கண்பர்களும் "மோட்காறினுல் இடறுபட்ட சிரிக்கிதகாதவனென்று வைது அருகுருத்து என் பிரேதத்தைப் பார்க்கவும் வரமாட்டார்கள். தங்களது கார் என்னைத் தூக்கி யெறிய நான் அந்தரத்திலே நரகம் போட்டுக்கொண்டு விழும்பொழுது, "என்னைப்படைத்த கடவுளே, இரக்கார் ஒரு ரோல்ஸ்ரோய்ஸ் (R lls R yce) ஆயிருந்தால் எனது ஜென்மம் உத்தம ஜென்மதான். 'இரக்கக்கூடைக்கும் நல்ல கதிதான்" என்றே சொல்லிக்கொண்டு விழுந்தேன்", என்று விஷயத்தைத் துரைமகனுக்கு விளங்கவைத்தேன்.

* * *

பிரபுவுக்குச் சினத்தணிந்து, "நீ யொரு பழுதான மனுஷனல்லத்தான். சந்தோஷம் காலை வந்தனம்" என்று சொல்லிப் புறப்பட ஆரம்பித்தார். நானும், "தங்களைப்போன்ற நீதியானவர்களே நான் இன்னும் காணவில்லை. நான் விழுந்ததைப்பற்றிமாத்திரம் நீங்கள் யோசிக்கக்கூடாது. வயசுபோன இந்த நோத்திலே இடைக்கிடை நெடுங்குமுடங்கில் விழுந்தெழும்பினுல்தான் எலும்பு முத்தும். குட்மோர்னிங், ஸேர்" என்றொரு சலாம் போட்டேன்.

அம்மி மிதித்தல் - கன் மிதித்தலே.

அறிஞர்களே! பிரமஸ்ரீ. த. சபாரத்தினக் குருக்களவர்கள் அ-ம இலக்க இந்தசாதனத்தில "அம்மி மிதித்தலா கல் மிதித்தலா" என முடிவுரையிட்டு, விவாகத்தில் அம்மியையுங் குழவியையுஞ் சேர்த்து வைக்க வேண்டு மென்று வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்; இவ் விஷயத்தில் எனக்குத் தோன்றியவற்றை இங்கு எழுதுகின்றேன்

1 அவைத்தற் கருவி யென்னும் பொருளுடைய பேஷணி அம்மியுங்குழவியு மென்றார்கள் அவ்வாறாயின் ஆட்டுக் கல்லுங் குழவியும் பேஷணியாகாதோ?

2 கல்லாகிய அம்மி குழவிகள் நிலை யென்னும் பொதுப் பெயரினவாகி, அம்மி குழவி யெனச் சிறப்புப் பெயராய் வழங்கு மென்றார்கள். அப்படியாயின், "நிலையிடை யன்னவள சிறுக தந்தான்" என்ற விடத்துச் நிலை என்னும்பொதுப் பெயரைக் கல்லெனக் கொள்வதன்றி அம்மி குழவி யென்று கொள்ளக் கூடாதல்லவா?

3 அகோர சிவாசாரியர் அம்மி மிதித்தலென முகவுரையிட்டுப் பத்ததி செய்திருக்கிறாரென்றார்கள். அவர் தமிழிலும் பத்ததி செய்திருக்கிறாரோ?

4 திருவிளையாடற் புராணம், திருவானைக்காப் புராணம், திருக்கோளிலிபூர்ப் புராணம், காசி காண்டம் முதலியவற்றிலெல்லாம் அம்மி யென்றே வழங்கியிருக்கிறதெனறார்கள். அம்மியென்றே எனத் தேற்றோராம் கொடுத்தமையாலே அவற்றிற் குழவியையுஞ் சேர்த்து வைக்க வேண்டாமெனறு கூறினராயிற்று.

5 முன்னோரெவரும் அம்மி குழவியை வைத்து வழங்கி யிருக்கின்றார் களெனறார்கள்—இந்தியாவில் எவரும் விவாகத்தில் அம்மியை மாத்திரம் வைப்பதன்றிக் குழவியையுங் வைத்துவரும் வழக்கமில்லையே. இந்தியாவிலிருந்து இங்கு வரு கன்னாம் விதியாசாலையில் உபாத்தியாயராக விருக்கும் பிரமஸ்ரீ தெம்பர சாஸ்திரிகள் அவர்கள் இந்த வைவாகிகர் கூடாவகுதன் புத்திரனுங்கு நடத்திய பயபயனத்தில் அம்மியை மாத்திரம் வைத்து நடப்பித்தார்களென்று சேரிற் பார்த்தோர் சொல்லக் கேள்வியுற்றேன். இதனுல் இந்தியாவில் வழக்கமிதுவே யென்பதெனவோரு மறியக் கிடக்கின்றதே. புருஷனுக்கு உபயோகம் போலப் பெண்ணுக்கு விவாகம் உபயோகமல்லவா?

ஆபஸ்தம்ப கிருஹ சூத்திரத்தில், தகுதினை யதாசம்மான மாஸ்தாபயதி ஆதிஷ்டே தி- (பெண்ணை) வலக் காலினுல் ஆதிஷ்டேமென்னும் மந்திரஞ் சொல்லி அம்மியை ஏற்றுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் அசமாவை மாத்திரம் வைக்க வேண்டு மெனப தன்றி, குழவியை வைக்க வேண்டாமென்பது தெளியக் கிடக்கின்றது குழவியையும் வைத்தபின் அதையுஞ் சேர்த்து மிதிக்க வேண்டு மென்று விதிக்க வேண்டுமே

பிரயோக சந்திரிகை என்னும் நூலில் புஷ்பவனத்திலே "தர்ஷத் புத்திரர்களுக்கு" (ஐம்பொறிகளுக்கு) குழவியை வைக்க வேண்டு மென்றும் ஆபஸ்தம்பகிருஹ சூத்திரத்தில் "அசலம் ராதயாசைய யாதர்ஷத புத்ரேத்ரஷத் புத்ரேண பேஷயித்வா. குதலாகாத கல்லினையினுலே ஒரு குழவியிலே (ஆலம் முனையை வைத்து) மர்தன குழவியினுலே நசுக்கி என்றும் கூறப்பட்டிருத்லால், புஷ்பவனத்தில் இரண்டுகுழவிகள் மாத்திரம் வைக்க வேண்டு மெனபதன்றி அம்மியை வைக்க வேண்டுமெனபது தெளியக் கிடக்கின்றது. ஒருகால் அம்மியை வைப்பின் அதற்கொரு கிரகம் மிதிக்கவேண்டு மெ இப்பமோ வே தாவர் அம்மி குழவிகளின் விஷயங்களை முடிவு பண்ணி யிருக்கவும் வேண்டுமல்லவா? அம்மியை வைக்கவேண்டுமென்ற விடத்திற் குழவியையும் வைக்க வேண்டு மென்று வாதாடுகின்றது என்ன பேதைமை!

அம்மி ஏற்றும் மந்திரத்தினர்த்தம் வருமாறு: பெண்ணே, இந்த அம்மியிலேறு. எறினவிடத்து இது எப்படி அசைவில்லாமல் இருக்கிறதோ அப்படி நீயும் ஸ்திர சித்த முடையவளாகிரு. உன்னைக் கெடுக்கும் இதர ஜனங்கட்டங்களிற் போகாதே உன் பர்த்து ஜனங்கட்டங்களிலிரு என்பதே. இதனுல் அம்மி ஏற்றுதல் அப் பெண்ணுக்கொரு சற்புத்தி கூறியதாக முடிகிறது

இம் மந்திரத்திற் சொல்லப் பட்ட அசமா என்னும் பதம் அமரகோசத்திற் கல்லின் பரியாயமாகவிருப்பதாலு வழங்கப் பட்டிருத்லாலும், குருக்களவர்களெழுதிய செல்லு முதலிய வற்றிற்கு வேறு பெயர் கூறியிருத்லாலும், கற்செல்லாவற்றிறு முயர்ந்த கருங்கல்லினுல், ஏறி நின்றால் அசையாதிருக்கக் கூடியதாகச் செய்யப்பட்ட அந்தக் கல்லுக் அசமா என்று சொல்லப் படுகிறது. அதுவே இங்கு அம்மி யெனறு வழங்கப்பட்டு வருகிறது.

சம்ஸ்கிருதத்திலுள்ள எல்லா நூல்களிலும் லொ என்றும் அசமா என்றும் தமிழிலுள்ள பல நூல்களிற் லொ என்றும், சில நூல்களில் அம்மி யென்றும், "கல்லார்ப் பெருமணம் வேண்டா" என்ற தேவாரத்திற் கல் என்றுஞ் சொல்லப் பட்டிருக்கலால், லொ, அசமா, அம்மி கல் என்பன ஒரு பொருளேயாகும் எவ்வாறெனில், லொ யென்பது கல்லாதலாலு அசமா என்பது கல்லின் பரியாயமாதலாலு, அம்மி யென்பது கல்லாற் செய்யப் பட்டிருத்லாலும் கல்லெனப்படுமொரு பொருளைக் குறித்தனவேயாம்

சம்ஸ்கிருதத்தில் விவாக விஷயத்திற் லொ என்றும் அசமா என்றும் கூறியதன்றி வேறாவது பேஷணி யென்று கூறப்பட்டிருக்கிறதா? லொ என்பதற்கு அம்மி யென்று பொருள் கூறும் பட்சத்தில் லொ விக்கிரக மென்றுவிடத்தில் அம்மி விக்கிரக மென்றும், ஆதாரலொ லென்றுமிடத்தில் ஆதார வம்மி யென்றும் லொவர்ஷமென்றவிடத்தில் அம்மிமழையென்றும் பொருள் கூறின் பொருந்துமா? இதென்ன விபரீதம்!

வென் கோயில் என்ற மாத்திரத்தில் ஆலயடையாரும் பரிவாரங்களும் அமைவது போல அம்மி என்ற மாத்திரத்தில் குழவியு மமையுமென்றால், அதிலமைக்கப்படும் பொருள்களும் அமைந்து விடுமே. இன்னும், அம்மி யென்றதிற் குழவியுமமைய மென்றால், உரலென்றதில், உலக்கையும் அதில் இடிக்கப்படும் பொருள்களும், சட்டி யென்றதிற் காண்டியும் அதிலிருக்கும் பொருள்களும் அமைந்து விடுமே. அம்மியை விட்டுக் குழவியைப் பிரிக்கப்படாதென்றார்கள் எப்பொழுதும் கூடியிருப்பதெல்லாங் கூடியும், பிரிக்கிறப்பெதெல்லாம் பிரிந்து மாயிருத்தல் வேண்டும் பிறந்த காட்டொடங்கித் தாயோடிருந்து வளர்ந்த பெண் முன்னொரு பொழுதும் பார்த்திராத தனது தாயையுந் தாயை விட்டுப் பிரிந்து போதலையும் பாவமென்று தடுப்பார் போலும்! இதென்ன ஆச்சரியம்.

ஏர்நூலிலாவது குழவியும் வைக்க வேண்டுமென்று கூறுகிறார்க, வழக்கமாகிய குழவியையும் வைத்தால் அம்மியோடு குழவியையுஞ் சேர்த்து மிதிக்கிறார்களா. அதுவுமில்லையே.

அம்மியை விட்டுக் குழவியைப் பிரிப்பார்க்கு நாரதேவனை பண்டாமென்று கிதிரகுப்தோ பாக்யானத்திற் கூறப்பட்டுள்ளென்றார்கள். அப்படியாயின், அது கிதியமும் வைத்திருக்கும் விஷயத்தைக் கூறியதாகி. விவாகத்திற். அம்மியையும் புஷ்பவனத்தில் குழவியையும்வைக்க வேண்டு மென்று விதித்த விடேட விதியிற் செல்லுதென்க.

கல்யாணவிஷயத்திற் கல்லு வைத்தலென்பது அமங்கல மென்றார்கள். அப்படியாயின் நாரதிகாத்தம் என்பதை அமங்கல மென்றும் குப்பாபிஷேகத்திற் கிலங்காபனம் கல்லு வைத்தல் என்பதை அமங்கலமென்றுக் கடுத்து விடுவார்கள் போலும் இதென்ன குயுக்தி.

அறிஞர்களே! விவாகத்தில் அம்மியை மாத்திரம் வைப்பதன்றிக் குழவியையுஞ் சேர்த்து வைக்கவாகுதென்பது பலநூறுஅணியாதலாலும், முன்னோர் வழக்கமாதலாலும் அம்மியை மாத்திரம் வைத்தலே துணியென்க.

இப்படி யிருக்க அம்மியைத் தாயென்றும் குழவியைக் குழந்தை யென்றும் குழவியினுலரைத்தல் முதலியவற்றைப் பின்னை தாய் மேல் விழுந்தழுகுவதென்றும், அம்மியோடு குழவியைச் சார்த்திவைத்தல் தாயோடு பின்னை படுத்திருப்பதென்றும், ஆன்கு காளும் குழவியின்றி அரைத்தல் முதலியதொழிலுமின்றித் தனியே இருத்தல், தாய் பின்னையைத் தேடாமலும் பால் கொடாமலும் தனியே யிருப்பதென்றும், மஞ்சள் முதலிய அலங்காரங்களாற் சிறந்து குழவியோடு கூடியிருக்கும் மங்கலரமாகிய அம்மியை மணமகன் ஸ்ரீ சகுனமாகக் கண்டு, மணமகருக்குள் காட்டவேண்டு மென்றுங் கூறி, அம் மங்கலகரமான அம்மியைக் குப்பிடென்று கூறுவாலினுமுள்ளென்று சொல்லலு மாகிய இவை போலவான எல்லாவற்றையும், ஒரு பெண் குழந்தை தான் வைத்து விளையாடுகின்ற பாவைப் பின்னையைத் தன் புத்திரி யென்று பால் கொடுத்தும் தாலாட்டியும் சிறிவை செய்லித்தும் விளையாடுவது போலு மென்று பெரியோர்க் ரவையாடுவோர்யெனன்றி ஒரு பொருளாக மதியார்கள்.

ந. சிவராமிக் நாதக்கள்.
விஜயரூன்றி
திருகோணமலை.

தம்மவர்கள் அக்கினிகாரியஞ் செய்யும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

(முற்றொடர்.)

இன்ன இன்ன இடங்களில் ஓமஞ்செய்யவேண்டுமெனபது.

அகக்னிகுண்டத்தில் விறகாக இருந்தாலும் சரி; அதில் ஓமஞ்செய்தால் நோயுண்டாகும். புகையாக இருந்தாலும் சரி; அதில் ஓமஞ்செய்தால் துக்கமுண்டாகும். கோதுமாக எரிந்த இடம் கண்கள்; அதில் ஓமஞ் செய்தால் தான் எரிந்த முகத்தை அக்கினியால் கெடுதியுண்டாகும். கழலாயிருந்தாலும் தலை; அதில் ஓமஞ் செய்தால் துக்கமுண்டாகும். ஆகையால் அக்கினியினுடைய சுவாலையாகிய சிகையில் ஓமஞ் செய்யவேண்டும்.

பாலினால் ஓமஞ்செய்தால் பசுக்களுண்டாகும். பசுவினெய்யால் ஓமஞ்செய்தால் மகத்தான ஐஸ்வரியமுண்டாகும். சர்க்கரையினால் ஓமஞ் செய்தால் கீர்த்தியுண்டாகும். தயிரினால் ஓமஞ்செய்தால் சகல சம்பத்தும் விருத்தியாகும். அன்னத்தினால் ஓமஞ் செய்யின் வசியமும், திவ்வியான முலிய சுகபோகன்டிமுண்டாகும். நெற்பொரியினால் ஓமஞ் செய்தால் அநுவுங் கீர்த்தியைக் கொடுக்கும். எள்ளும் அரிசியுங் கலந்து ஓமஞ்செய்யின் அதிக கீர்வியமுண்டாகும். தேனினால் ஓமஞ் செய்யின் நினைத்த காமங் கைகூடும். துங்கமப் பூவினால் ஓமஞ் செய்யின் வஸ்திரப்பேறுண்டாகும். வேற்றிலைபாக்கால் ஓமஞ்செய்யின் நல்லாகும் கவியையுமுண்டாம். தாமரைப்பூவாலோ ஓமஞ்செய்யின் இராசவசியமுண்டாம். நீலோற்பலப்பூவாலோ ஓமஞ்செய்யின் இராஸ்ரீர் வசியமாவள். ஓம்பற் பூவாலோ ஓமஞ்செய்யின் மந்திரி வசியமாவள். அரசு சந்து முதலியவற்றால் ஓமஞ்செய்யின் பிராமணர் முதலியவர்கள் வசியமாவர்கள். வறுவ்வரிசியினால் ஓமஞ்செய்யின் மழை விடுவிடும். நீர்வரிசியினால் ஓமஞ்செய்யின் மழையுண்டாகும். புந்தனி முதலியவற்றால் ஓமஞ் செய்யின் எல்லாம் வசியமாகும். அக்கினி கந்தீர முடையராகத் தோன்றின் பிராமணக் கொலை, ஆசிரியக்கொலை, குருபத்தினியைப் புணர்தல், பசுவைக் கொல்லுதல், செய்நன்றி மறத்தல், மதுவருந்தல் என்று சிந்தப்பாவங்களைச் செய்தவனென்றும், அக்கினி அசுத்தவாசனையுள்ளதாயிருந்தால் பூர்வைக்கவர்த்தவனென்றும், அக்கினி பிளவாகனையுடையதாயிருந்தால் தனது எசமானைக் கொலைசெய்தவனென்றும், அக்கினி பிரிந்துக்கொண்டிருந்தால் ஸ்திரீகளைக் கொள்ளவனென்றும், அக்கினி நடுங்கக் கொண்டிருந்தால் பொன்னைத் திருடினவனென்றும், அக்கினி துடித்துக்கொண்டிருந்தால் சிகக்கொலை செய்தவனென்றும், அக்கினி காந்தியில்லாதிருக்கின் கருப்பத்தை யழித்தவனென்றும், அறிந்து கொள்க.

உச்சித் திலதமுதலிய பூவின் நிறம் போலவும், தம்பலப் பூச்சியின் நிறம் போலவும் அக்கினி சுவாலித்தால் நிட்சை பெற்றுக் கொள்பவனுக்கு அனேக நன்மையுண்டு. கற்பூரம், அகில், சந்தனம், கஸ்தூரி முதலிய நல்வாசனை யுடையதின் சிஷ்யன் சுகியாயிருப்பன்; வினைதலிய இனிய சந்தமுடையதாயிருந்தால் சிஷ்யன் இன்மையிலும் மறுமையிலும் உத்தமனாக யிருப்பான், அக்கினியின் சுவாலையானது கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, நடுவென்னும் திக்குகளில் காய்ந்திருந்தால் சிஷ்யன் செல்வனாயிருப்பான். புகையெழுந்திருந்தால் சிஷ்யன் ஓராசாவாக யிருப்பான்.

வர்ணம், சப்தம், கந்தம், சுவாலை, தூமம், ஈரணம், எனக் துண்டாக்கினி அறுவகைப்படும். அவற்றுள் வர்ணமாகிய நிறம் பதினொருவகைப்படும், சப்தம் ஐந்து வகைப்படும், கந்தமாகிய பரிமளம் பதின்மூன்று வகைப்படும், சிகையாகிய சுவாலை ஐந்து வகைப்படும், தூமமாகிய புகை நான்கு வகைப்படும். ஈரணமாகிய கத்தேதம் பன்னிரண்டு வகைப்படும். இந்தப்பிரகாரம் துண்டாக்கினி ஐம்பது வகைப்படுமென வறிக. (தொடரும்)

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

பெண்மணிகளுக்கோர் வேண்டுகோள்.

அன்பார்ந்த சகோதரிகளே!

பண்டைக்காலத்து ஸ்திரீ ரத்நங்களின் தெய்வ சரித்திரங்களை நீங்கள் வரித்திருக்கின்றீர்களா? வரித்திருப்பீரேல், அவர்களின் அன்பு நெறியும், அடக்கத்தின் தட்பமும், பொறுமையாகியும், பதிவ்ரதியின் விசேடமும் ஈசுவரபூஜையாட்டின் பெருமையும், டாம்பீக மற்ற இல்லற ஒழுக்கமும் எவ்வாறிருந்தன வென்பதை ஒருவாறு அறிந்தே யிருப்பீர்கள். தமிர மன்னவனின் சீர்த்தியும், பெருமையும் இங்கிவலில் இன்றும் அழியாமற்றானே யிருக்கின்றன. சகோதரிகாள்! தெய்வரின் வழித்தோன்றல்களாகிய உங்கள் நிலைமை என்னவாயிருக்கின்றது அவர்களின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி நடக்கின்றீர்களா? இல்லையேன், பெரும் பரிதாபம். பூர்வீக மாதரின் தங்கள் வீட்டுக்கருமங்களைத் தாங்களே செய்தும், கணவனுக்குச் செய்யவேண்டிய சகல பணிவிடைகளைத் தாங்களே செய்தும் முடித்தார்கள். கணவனுக்கு அன்னங்கொடுத்து துபசரிப்பதில் தாயைப்போலவும் தொண்டுசெய்வதில் பணிப்பெண் போலவும், சகல செல்வங்களுமுடையவளாய்க் காட்டுதற்குத் தன்னை ஆடையாபரணங்களா லலங்கரித்துத் தாமரை மலரில் உற்பவித்த மகாலட்சுமியைப்போலவும், பொறுமையில் பூமிதேவியைப்போலவும், சரசல்லாப இன்பத்தில் மேனகையைப்போலவும், புத்தி கூறுவதில் மந்திரியைப்போலவும் நடந்து வந்தார்கள். ஆனதினாலேதான்,

அன்னதையு மடியான் பணிபு மலர்ப்
பொன்னினழகும் புவிப் பொறையும் — வன்ன
வெரிதுமிலும் வீரன் மந்திரி மதியும் [மூலை
பெரிலிவை யுடையாள் பெண.

என்றனர் ஆன்றோர். பெண்கள் பாக சாத்திரத்தைக் கற்றுணர்ந்து தம் நாயகர் விரும்பும் கற்பிதார்த்தங்களைச் செய்துகொடுத்துப் போதித்தலையே கடமையாகக் கொள்ளவேண்டும். "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்னும் முதுமொழியின்படி கணவனுக்குக் காலாகாலமறிந்து உண்டிகொடுத்து உபசரித்தல் ஆகிய பணிவிடைகளே உத்தமிகளுக்கேற்ற அழகாம். இத்தகையோர் உலகத்தில் சாதிக்கமுடியாத கருமங்கள் ஒன்றுமில்லையாம். இவ்வித ஒழுக்கநெறியில் நின்று பேறுபெற்ற திருவள்ளுவநாயனாரின் மனைவியார் இறந்த பொழுது,

அடிசிற் கினியாளை யன்பு டையாளை
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடி [யோ
பின்னால்கி முன்னெழுந்த பேதையே போதி
என்றாங்கு மென்கண் ணிரா.

என நாயனார் தம் நாயகி தமக்குச்செய்த அன்பின்பெருக்கை நினைந்து பிரிவு ஆற்றுதலாராய் மனக்கவலையோடும் பாடினாராம். இதைப் 'பொன்ற பதிபக்திபிரிந்த இன்னுமோர்கதை யுளது. அதாவது, முன்னொரு காலத்தில் ஒரு ரிஷியும், அவரது பிரியபத்தினியும் ஒரு கானகத்திற் றவஞ்செய்துகொண் டிருந்தார்கள், அங்கனமிருக்கும்பொழுது, யாரோ ஒரு இராசகுமாரன் வேட்டையாடிக் களைத்து திரும்பிவருகையில் இவர்களிலவத்தைக் கண்டு "அம்மா தாகசாந்தி செய்துகொள்ளக் கொஞ்சம் தண்ணீர்தரவேண்டும்" என்று கேட்டான். அச்சருணத்தில் தம் நாயகன் தம் மடியிதுதலைவைத்து அயர்ந்து நித்திரையாயிருந்தார். ஆதலால், இவருடைய நித்திரைக்குப் பங்கு செய்வது பதிபக்தித் துரோகமாமென்று நினைந்து அதிலிருந்து எழுந்திருக்கக் கூடாதவராய் "அதோ இருக்கின்றது தண்ணீர் அள்ளிக் குடியும்" என்றார் ரிஷிபத்தினி. இதைக் கேட்டதும் இளவரசருக்கு கடைக்கோடியுந் தாகவேட்கையு மேலிட்டிருந்ததால், கண்கள் சிவக்கச் கோபம் வந்விட்டது. மீண்டும் "தண்ணீர் தரவேண்டும்" என்றார். ரிஷிபத்தினியும் முன்போலவே "அள்ளிக்குடியும்" என்றார். கடைசியாய் இளவல், தண்ணீர் தரவிட்டால், அதோ விளையாடிக்கொண்டிருக்கும் அப்பிள்ளையைத் தூக்கி அக்கினியிற் போடுவேனென்று பயமுறுத்தினார். அதற்கு மஞ்சாமல் அவ்வம்மையார், நீர் செய்வதைச் செய்யும் நானோ எனது பதிராவற்கு நித்திரைப்பங்கு செய்யமாட்டேன்" எனவும், உடனே இராசகுமாரன் ஆண்டு விளையாடினிற பிள்ளையைத் தூக்கி நெருப்பிற் போட்டுவிட்டான். போட்டுமென்னே? உலகத்தில் பதிவிரதைகளின் முன்னின்று துட்டத்தனத்தால் வெற்றிபெற்றவர்களு முண்டா? ஒருபோதுமில்லை. ஆகையால், நெருப்பில் எறியப்பட்ட அப்பிள்ளை யாதொரு விசுவினமுமின்றி, முன் விளையாடிக்கொண்டிருந்தது போலவே விளையாடிற்று. இவவற்புதத்தைக் கண்ட அரசபுத்திரன், ஆச்சரியமுற் றிலிலுக்கொண்டு

"தண்ணீர் நிலவத்தாற் றக்கோர் குணங்கொடையார், கண்ணீர்மை மாறுக் கருணையால் — பெண்ணீர்மை, கற்பழியாவாற்றாற் கடல்குழ்ந்த வையகத்துள், அற்புதமா மென்றே யறி"

என்பதைப் பலமுறையுஞ் சிந்தித்து வெட்கித் தலைகுனிந்தவராய்த் தாகத்தீர்த்துக்கொண்டு போய்விட்டார். ஆகையால், சகோதரிகளே! இவைத்தமிழோர்பாலர் அற்புதங்களைச்செய்யாவிட்டாலும் இவர்களின் சரித்திரங்களையேனும் படித்து வர்தீர்களானால் உங்களுக்கு நல்லறிவு உதயமாகுமல்லவா? பதிபக்தியில்லாமல் நீங்கள் உடுத்துப் படுத்துக் கோயிலுக்குப் போவதால் மட்டும் வரும் புண்ணியம் யாது?

"தெய்வர் தொழாஅள் கொழுநற் றொழு
தெழுவாள், பெய்யெனப் பெய்யுமது."

என்றார் நாயனாரும். தன் நாயகனை முதற்கடவுளாக வெண்ணித் தொண்டாற்றும் உத்தமி மழை பெய்யென்றவுடனே பெய்யுமாம். இத்தகைய பெருமையாய்தோறாது வழித்தோன்றல்களாகிய நீங்கள், இக்கேவல நிலையிலிருப்பது பெரும் பரிதாபத்திற் பெரிதானதொன்றும். ஆகையினால், உங்களுக்கு வாய்த்தது கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் பருவத்தானெனபதை யோர்ந்து கற்பின் பெருமையை உலகத்தில் நிலைக்கச்செய்யுங்கள்

ச. ஆ. மாணிக்கம்,
மானிப்பாய்.

கம்பனார் காவியம்.

பண்டிதை—பத்மாவதியம்மாள்.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லா
மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
லோங்கு நிழலிலிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத்
திறல்சே ரிராமன் றிருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க் கிதயங் களியாதே.

புவலயிற் செல்வமெல்லாம் பொருந்தி யரசாண்டிருந்தாலும், தேவருலகிற் கற்பகவிருக்ஷ நிழலிலிருந்தாலும் ஸ்ரீராமபிரானது திருக்கதையமைந்துளதாகிய கம்பராடாது கவிதையிற் போல் கற்றவர்களுடைய மனம் இன்பமடையாது எனக்கூறும் பூன்றவர் மெய்யுணர்க்கினங்கக் கம்பனாரியற்றிய காவியமானது செந்தமிழ்க் காவியங்கள் பலவற்றிலும் ஓர் மாமணி போன்று திகழ்கின்றது. சிந்தாமணி சிலப்பதிகாரம் குண்டலகேசி மணிமேகலை முதலான பல்பெரு காவியங்களின் மத்தியில் கம்பனார் காவியம் விளங்கும் மாட்சி தாரகை நடுவட் டண்மதி போன்று நாலவார் பலர்க்கும் நல்லறிவு தாமரைதுன்னது.

கவிகுல திலமாகிய கம்பனார், வால்மீக முனிவர் கூறாநிய இராமசரித்திரத்தை யெடுத்துக் கொண்டு தமது உள்ளத்துணர்ச்சி காரணமாக மெழுந்த இன்பத்தைக் கவிபெனுமமிர்தமாக, "நாம் பெற்ற இன்பத்தை மரறையோரும் பெற்றிடுக" வென்னும் நியாக வுணர்வுடன் சொரிகின்றனர். இக்கவிஞர் சிகாமணி மோனைத் தொடையும் எதுகைத் தொடையும் முரண்படாதிருக்கவும் உவமை உருவகம் தீபகம் முதலாகிய அலங்கார வகைகள் அமைந்திருத்தற்காவும் கவிபாடினாரல்லர். இயற்கையினமைந்த மதிநுட்பத்தால் இப்பெரியார் குளத்தினின்றும் இன்பயிரும் கவிக ளூற்றெடுத்துப்பெருகலாயின, வடமொழியில் கவி என்பதற்கு அலங்கரித்தல் புலையது என்பது பொருளாகும். உண்மைக் கவிஞன் இயற்கையின் அழகை யுள்ளவாறுணர்த்து அதனையே கவியெனப் புனைகின்றான். அங்ஙனம் புனையப்பட்ட கவிகள் கவிஞனுடைய மனோபாவத்தைப் பிரதி விம்பிக்கும் கண்ணாடிபோன்று விளங்குகின்றன. கவிகள் என்னும் பெயருக்குரியன இயற்கையி னமைந்த கவிகளே. இக்கவிகளில் இயற்கைத் தோற்றங்களெல்லாம் சேர்ந்கண்டு அமைவிக்கத்தாற் போன்று பொலிந்து விளங்கும். இக்கவிகள் கற்பவருக்கு மனவெழுச்சியைக் கொடுத்து அவருக்கு இயற்கையோ டிணைந்த இன்பத்தை யளிக்க வல்லன. இவ்விதமான நல்லிணக்கம் வாய்ந்த கவிகளாற் புனையப்பட்டுவிளங்கும் காவியமாகிய இராமாயணத்தைப் புனைந்துகம்பராடர் "கவிச் சக்கரவர்த்தி" யென்னுஞ் சிறப்பமைந்த நாமத்திற் குரியராஞர்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பனார் சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பழைய காவியவரிசையமைந்த முறையில் பாக்களை யமைத்தாரல்லர். தாமாகவே நூர் புதுமுறை கண்டு விருத்தப் பாவாற் செய்யுட்களமைத்தனர். விருத்தப் பாவால் இந்தநடை நூல் யாத்தல் தொல்காப்பியனார் காலத்தில் அமைந்ததோர் முறையல்ல. இராமசரிதத்தை மாத்திரம் வால்மீகர் வாக்கினின்று மெடுத்துக்கொண்டு தமது உள்ளத்தினின்றும் எழுந்த உணர்ச்சியாகிய இன்கவிகளை ஆக்குகின்றார்.

'உலகம்' என்றும் மங்கலச்சொன் முதலாக வெடுத்துக்கொண்டு கவிமழை பொழிய ஆரம்பித்து முதற்கண் கடவுள் வணக்கங் கூறிப் பின்னர்,

நுசை பெற்றுயர் பாற்கட லுற்றெழு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யரையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

அறைபு மாடரங் கும்மடப் பள்ளிகள்
தறையிற் றெிந்தி நச்சருங் காய்வரோ
இறைபு ஞான மிலாதவென் பன்கவி
முறையி னூறுணர்ந் தாரு முளரிகொரோ?

என்பன முதலிய கவிகளால் அவையடக்கங் கூறுகின்றார். அதன்பின்னர், தமது கதையின் போக்கை யுய்த்துணரவைத்தாற்போன்று ஆற்றப்படலத்தை நலமகின்றார். கோசலநாட்டை யலங்கரிப்பதாகிய சரயுநதியானது வேண்டியார் வேண்டியாங்கியும் வள்ளியோர்போன்று மேகங்கள் வழங்கிய மழைத்தாரைகளால் வெள்ளம் மிகுந்து பெருக்கெடுத்து மலையிலுள்ள மணி, பொன், மயிற்றோலி, யானைக்கோடு, அகில் முதலான மலைபடு திரவியங்களை அள்ளிக்கொண்டு வருதலால் வணிகர்கள் போன்றும், மலைகளை யெடுத்தும் மரங்களைப் பிடுங்கியும் கொண்டுவருதலால் சமுத்திரத்தில் அனுகூட்டிய வாளரசேனை போன்றும், ஈக்கள் வண்டுகள் மொய்க்கத்தக்கதாகவும், அளவுகடந்து ஊட்டெழுந்ததால் தேக்கெறிந்து வருதலால் கன்னுண்மார்தர் போன்றும் பொலிகின்றது என்று அதன் போக்கினைப் புனைந்து, பின்னர் அதன் தோற்றத்தை,

எயினர்வாழ் தொ ரப்ப
மாரிமி னிரியல் போகி
வயின்கயி லெயிற்றி மாதர்
வயிறலைத் தொட வோடி
அயின்முகக் கலையும் வில்லும்
வாரிகொண் டலைக்த லாலர்
செயிர்தரு கொற்ற மன்னர்
சென்னையை மானு மன்றே.

முல்லையைக் குறிஞ்சி யாக்கி
மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெற்றல் தன்னைப்
பொருவரு மருத மாக்கி
யெல்லையில் பொருள்க ளெல்லா
மிடைபடு மாறு சீரார்
செல்லுறு கதியிற் செல்லும்
வினையெனச் சென்ற தன்றே.

என்பன முதலிய கவிகளால் அழகுபெறப் புனைகின்றார்.

இங்ஙனம் கூறமுகத்தானே தமது காவியமானது ஆற்று நீர் போன்று சேர்பொருளுடையதாய்ப் பலவிதமான அலங்காரங்களுமமைந்ததாகவும், பலவிதமான அர்த்தங்களைக் கொடுக்கக்கூடியதாகவும், முல்லையைக் குறிஞ்சியாக்குதல் முதலான 'தினையைக்கூறுமாற்றால் தாம் முதனூலின் மாறுபடத் தமது தமிழ்நாட்டிற்கேற்ற விதமாகச்சரித்திரப்போக்கையும் லருணனை முதலியவற்றையும் மாற்றி அமைத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

பின்னர் ஆற்றவளத்தாற் செழிப்படைவதாகிய கோசலநாட்டை வர்ணிக்கின்றார். நாட்டு வளங் கூறவே கவிச் சக்கரவர்த்தியார், தம் உள்ளத்தில் பல்லவை வளங்களும் துளும்பி நிறைந்துள்ள ஓர் நாட்டின் மத்தியில் நிற்பவர் போன்று பாவனை செய்கின்றார். அப்பாவனையானது அவருள்ளத்தினின்றும் பொங்கியெழுந்து கவிகளாய்ப் புறப்படுகின்றன. அங்ஙனம் புறப்படவே,

வரம்பெலா முத்தர் தந்தும்
மடைபெலாம் பணில மாரிர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேரிக்
குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப்
பரம்பெலா மன்னம் பாங்கர்க்
கரம்பெலாஞ் செந்தேன் சர்தக்
காவெலாம் கனிவண் டிட்டம்.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை யிளர்கர் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெறிநீர் காட்டத்
தேம்பிழி மதுர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம் வீற்றிருக்கு மாதோ.

என்பனமுதலிய கவிகளால் கோசலநாட்டின் செவ்விய வளத்தைச் சிறப்படன் புனைகின்றார். சகல வளங்களும் துளும்பியிருத்லைப் புனைந்துரைத்துப் பின்னர் தமது உளமானது அந்நாட்டிற் குரைவொன்றைக் கண்டுகொள்ள முடியாமையால் அளவுகடந்த பெருமிதத்துடன்,

வன்மை யில்லையோர் வறுமை யின்மையால்
நின்மை யில்லைநேர் செறுநரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்,

என்னுங் கவியினால் வறுமை யில்லாமையால் கொடையுமில்லை; சத்தருக்க ரின்மையால் வலிமையுமில்லை; பொய்யில்லாமையால் உண்மையுமில்லை; பல சாஸ்திரங்களும் மேவுதலால் வெள்ளறிவு மில்லையென்று கூறுகின்றார்.

இங்ஙனமே கோசல நாட்டின் தலைநகராகிய அயோத்திமாநகரையும் சலசாலவங்காரங்களும் பொருந்த வர்ணித்து அந்நகரத்தின் சிறப்பு உலகவர்க் தெழுதலாறுண்டாகிய பெருமிதத்தால்,

கல்லாது நிற்பார் பிறரின்மையிற்
கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல
ரல்லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு
மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு
மில்லை மாதோ.

என்னும் கவியினால் கல்லாதவர்க ளில்லாமையினால் கல்வியில் வல்லாருமில்லை; வல்லரல்லாருமில்லை; எல்லாரும் எல்லாச் செல்வமும் பொருந்தியிருத்லினாலே வறியோருமில்லை; செல்வருமில்லையென அழகுபெறக் கூறுகின்றார்.

மிதிலைக் காட்டிப்படலத்தில் மிதிலைமாநகரை வருணிக்கப் புகுந்த கம்பனார் அந்நகரமாது, துலசக்களாகிய சுரங்கினால் யான்செய் மாதவத்தினால் ஸ்ரீதேவி செந்தாமரை யிருக்கையை விடுத்து சண்டு வந்துறைகின்றாள். ஆதலால் நீர் விளாவில் வாரும் என்று ஸ்ரீராமரை யழைப்பது போன்று விளங்கினது, எனச் சிறப்புறப் புனைந்துரைக்கின்றார். இங்ஙனம் கூறும் பாடலகளை யற்றாராய்ந்தால் கவிச் சக்கரவர்த்தி சலயத்தக்கேற்ற விதமாகப் பொருட்களின் இயல்பான செய்கைகளைத் தமது நுண்ணறிவாற் றெரிந்திருத்லைக் கூறும் கற்பனைச்சுவை தென்னிறுணரக் கிடக்கின்றது. (வரும்.)

குமரன் ஆண்டிமடல்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Parisainar Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai.